**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.564 /2025 –** P.W.5

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. கலியாணசுந்தரம் | Father's Name. பக்கிரிசாமி |
| Village : ஐவநல்லூர் | Age: 48 |
| Date :04.06.2026 | தொழில் : விவசாயம் |

நம்பர்: 9003755167

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **4th day of June 2026.**

Signature of Witness

**Thiru. P. Gunaseelan (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **4th day of June 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் ஐவநல்லூர் காளியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2020 ஆம் வருடம் ஒரு நாள் தேதி மாதம் நியாபகம் இல்லை. செல்லூர் ஈசிஆர் ரோட்டில் ஒரு விபத்து ஏற்பட்டிருந்தது. நான் விபத்தினை பார்க்காததால், அந்த விபத்து எப்படி ஏற்பட்டது, என்ன என்ன வாகனங்கள் அந்த விபத்தில் சம்பந்தப்பட்டது என்ற

விவரம் எல்லாம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை யார் என்று எனக்கு தெரியாது. அந்த இடத்தில் இரண்டு, மூன்று பேர்கள் அடிப்பட்டு இருந்தார்கள். ஊர்க்காரர்கள் எல்லாம் சேர்ந்து 108 ஆம்புலன்ஸிக்கு போன் செய்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

கடந்த 26.10.2020 ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு, சொந்த வேலையாக செல்லூர் இசிஆர் ரோட்டில் சென்று கொண்டிருந்த போது, இருசக்கர வாகனத்தில் தனது பிள்ளைகள், மனைவியுடன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலையின் இடதுபுற ஓரமாக சென்றுக் கொண்டிருந்த போது, எதிர்திசையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த டாடா சுமோ என்ற நான்கு சக்கர வாகனத்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி இருசக்கர வாகனத்தின் மோதி விபத்தினை நான் நேரடியாக கண்ணுற்றேன் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

விபத்தில் காயம்பட்ட நபர்களில் தந்தையும், மகனும் இறந்துவிட்டதாக தெரிந்துவிட்டதாகவும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது உண்மை விவரத்தை மறைத்து, எதிரிக்கு ஆதரவாக மாற்றி தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**: இல்லை

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 20:08:40 +0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.564 /2025 –** P.W.6

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. தமீம்அன்சாரி | Father's Name. மோலாஷா மரைக்காயர் |
| Village : நாகூர் | Age: 51 |
| Date :04.06.2026 | தொழில் : ஓட்டுநர் |

நம்பர்: 8608311174

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **4th day of June 2026.**

Signature of Witness

**Thiru. P. Gunaseelan (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **4th day of June 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்சமயம் பெருமாள் கோவில் தெரு, நாகூரில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவ சமயத்தில் கதவு எண் 18A, மில்லுசந்து, புதுமனை தெரு, நாகூரில் வசித்து வந்தேன். இந்த விபத்தில் இறந்துபோன செய்யது முகமது அலி என் தங்கையின் கணவர் ஆவார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் என் தங்கை பர்லு நிசாவும், அவரது கணவர் செய்யது முகமது அலியும், அவரது

இரண்டு குழந்தைகளும் இருசக்கர வாகனத்தில் ஒரு நிகழ்ச்சிக்கு சென்று விட்டு, திரும்ப மாலை சுமார் 6.00 மணியளவில் செல்லூர் ஈசிஆர் சாலையில் நாகூரிலிருந்து , போராவாச்சேரி செல்வதற்காக சென்றுக்கொண்டிருந்த போது, எதிரே வந்த சுமோ மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். உடனடியாக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது, என் தங்கையின் கணவரும், என் தங்கையின் பெரிய மகன் ரகுமானும் இறந்து கிடந்தனர். காயம்பட்டிருந்த என் தங்கையும், என் தங்கையின் பெண் குழந்தையும் மருத்துவமனையில் சிகிச்சையில் வைத்திருந்தார்கள். மருத்துவமனைக்கு போலிசார் வந்து விசாரித்தார்கள். பிரேதங்களை போஸ்மாடம் செய்து , மறுநாள் ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**: இல்லை

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 20:08:48 +0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.564 /2025 – P.W.7**

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. முகமது யாசீன் | Father's Name. ஜெபார் |
| Village : நாகூர் | Age: 44 |
| Date :04.06.2026 | தொழில் : செட் வேலை |

நம்பர்: 8778467273

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **4th day of June 2026.**

Signature of Witness

**Thiru. P. Gunaseelan (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **4th day of June 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்சமயம் நாகூர் தெத்தியில் வசித்து வருகிறேன். வெல்டிங் வேலை பார்த்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன செய்யது முகமது அலி எனது மைத்துனர். அவர் எனது தங்கையின் கணவர். கடந்த 2610.2020 ஆம் தேதி நாகூரில் உள்ள எனது சித்தப்பா வீட்டில் நடந்த நிகழ்ச்சிக்கு எனது தங்கை பர்லு நிசாவும், அவரது கணவர் செய்யது முகமது அலியும், அவரது இரண்டு

குழந்தைகளும் TN 50 H 3352 என்ற பஜாஜ் டிஸ்கவர் என்ற இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு, திரும்ப போரவாச்சேரி மஞ்சக்கொல்லையில் உள்ள வீட்டிற்கு வருவதற்காக நாகூரிலிருந்து செல்லூார் ஈசிஆர் சாலையில் மாலை 6.00 மணியளவில் வந்து கொண்டிருந்தனர். அப்போது எதிரே வந்த TN 55 Z 7076 என்ற சுமோ வாகனம் என் தங்கையின் கணவர் ஓட்டிய இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். உடனடியாக நான் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது, என் தங்கையின் கணவரும், என் தங்கையின் சிறிய மகன் இதயதுல்லாவும் இறந்து கிடந்தனர். காயம்பட்டிருந்த என் தங்கையும், என் தங்கையின் பெரிய மகன் ஜீபிலி ரகுமத்துல்லாவும் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். மருத்துவமனைக்கு போலிசார் வந்து சவக்கிடங்கிலிருந்த எனது மைத்துனர், அவரது இளைய மகனின் பிரேதங்களை பார்த்து எங்களிடம் விசாரித்தார்கள். பிரேதங்களை போஸ்மாடம் செய்து , மறுநாள் ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**:

நாகூரிலிருந்து என் தங்கையும், அவரது கணவரும் மற்றும் இரண்டு குழந்தைகளும் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் வலது பக்கமாக உள்ள போரவாச்சேரி மஞ்சக்கொல்லைக்கு செல்ல வேண்டி, வலதுப்பக்கமாக திரும்பிய போது, எதிரே வந்த சுமோ வாகனம் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 20:08:59 +0530